எழும்பூரிலுள்ள வழக்கு மன்றங்களையும் மற்றும் சில மாவட்டங்களில் உள்ள வழக்கு மன்றங்களையும் புறக்கணித்தனர். சென்னை உயர்நீதி மன்றமும், சென்னையில் மற்ற நீதி மன்றங்களும் வழக்கம்போல் செயல்பட்டன.

திருவாளர்கள் கே. வி. சங்கரன், என். ஜோதி ஆகிய வழக்குரைஞர்கள் 20—4—79 முதல் சென்னை உயர்நீதி மன்றத்தினுள் உள்ள முத்துசாமி ஐயர் சிலை முன்னால் உண்ணாவிரதம் இருக்கின்றனர். அவர்களுடைய வேண்டுகோள் மதுரை திருப்பரங்குன்றம் காவல் நிலையத்தில் சம்பந்தப்பட்ட காவல் துறை அதிகாரியை தற்காலிகவேலை நீக்கம் செய்ய வேண்டும் என்பது. அந்த அதிகாரி விடுப்பில் இருக்கிறார். விடுப்பில் இருந்துவரும் பொழுது வேறு மாவட்டத்துக்கு மாற்றப்படுவார் என்று அரசு ஏற்கெனவே இந்த மன்றத்தில் அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர்.

பெருவாரியான வழக்குரைஞர்களின் கோரிக்கையும் சம்பந்தப்பட்ட காவல்துறை அதிகாரியை வேறு மாவட்டத்துக்கு மாற்ற வேண்டும் என்பதுதான். எனினும் ஒருசிலர் இந்த தற்காலிக வேலை நீக்கக் கோரிக்கையை மீண்டும் எழுப்பி போராட்டத்தைத் தொடங்கியிருப்பது துரதிர்ஷ்டமானது.

எழும்பூர், கோவை, பொள்ளாச்சி, ஈரோடு, மதுரை, புதுக்கோட்டை, திருச்சி ஆகிய இடங்களில் உண்ணாவிரதம் இருக்கின்றதாகத் தெரிகிறது. உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டு, நடக்கவிருக்கும் விசாரணைக் குழுவின் முன்னர் உண்மை வெளிவர வழக்குரைஞர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது வழக்கம்போல் எல்லா நீதி மன்றங்களும் செயல்படுகின்றன. எனவே, சட்டமன்றத்தின் இதர நடவடிக்கைகளைத் தள்ளிவைக்க அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: பேரவை முன்னவர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்தது, இதுபற்றி விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால் தேவையில்லை என்பதால் இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

4. கவன ஈர்ப்புகள்

அ. பெத்தூர்பெட் நகர மாணவர்கள் சிலர் உண்ணாவிரதம் இருப்பது குறித்து.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u>: 41-வது விதியின்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்து திருவாளர்கள் ஏ. ஏகாம்பர ரெட்டி, திரு. சி. ஆறுமுகம், திரு.

பெ. சு. திருவேங்கடம் ஆகியோர் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள். முதலில் திரு. ஏ. ஏகாம்பர ரெட்டி.

Thiru *A. EAKAMBARA REDDY: Sir, I wish to call the attention of the Hon. Minister for Local Administration to a matter of urgent public importance, namely, the serious situation arising out of the hunger strike by the Old students of Podatoorpet Town from 19.3.1979 demanding immediate provision of drinking water, proper drainage and street lighting and other basic amenities which had deen neglected for a long period.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதத்தூர் பேட்டை நகர பஞ்சாயத்து பழைய மாணவர்கள் போராட்டம், மேற்கூறிய பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி மற்றும் பஞ்சாயத்து தலைவர் இருவரும், அவர்களுடைய குறைபாடுகள் தக்க முறையில் கவனிக்கப்பட்டு ஆவன செய்யப்படும்'' என கோட்டாட்சியாளர் மற்றும் கோட்ட வளர்ச்சி அலுவலர் அவர்கள் முன்னிலையில் உறுதி கூறியதின் பேரில் 21—3—79 அன்றே நிறுத்தப்பட்டு விட்டது. இருந்த போதிலும் நகராட்சியின் தேவைகளை அறிந்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு முயற்சி செய்யும்.

[முற்பகல் 10.40]

THIRU EAKAMBARA REDDY: Sir I am thankfull for the assurance given by the Hon. Minister for Local Administration. But at the same time, the Podatore Town Panchayat is a thickly populated town with a population of 17,000 people. It is predominantly a weavers area. They require drainage, street lighting and drinking water facilities. In 1971, when I was Chairman of the panchayat Union, deep bore wells were sunk and hand pumps were erected. Irrequested the TWAD Board to take up this and provide water supply. This was brought to the notice of the Executive Engineer, Conjeevaram division several times and he was requested to provide drinking water supply to that area. At the same time, I also request. The Government to include Podatore Town Panchayat in the Urban Water Supply and Drainage Scheme. This is essentially felt by the people of that Town Panchayat. May I request the Hon. Minister for Local Administration, through you, Sir, to include Podatore Town Panchayat in the scheme of Urban Watc Supply and Drainage Scheme using his good offices with the Hon'ble Minister Concerned

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, குடிநீர் வாரியத்தோடு தொடர்பு கொண்டு இவைகளை விரைவிலே நிறைவேற்றுவதற்கும், மாண்புமிகு உறுப்பினராக கூறிய குறைபாடுகளை களைவதற்கும் அரசு நிச்சயம முயற்சி எடுக்கும்.